பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 176** **நாள்: 29.11.2017**

**சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான குறும்படங்கள் ஜெர்மன் கோத்தே இன்ஸ்டிடியூட்/மாக்ஸ் முயெல்லர் பவன் மற்றும் ரோட்டரி சங்கம் (சென்னை கிழக்கு) அமைப்புகளிடமிருந்து துணை ஆணையாளர் (கல்வி) அவர்கள் பெற்றுக் கொண்டார்.**

சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட 19 குறும்படங்களை ஜெர்மன் கோத்தே இன்ஸ்டிடியூட்/மாக்ஸ் முயெல்லர் பவன், ரோட்டரி சங்கம் (சென்னை கிழக்கு) ஆகிய அமைப்புகளிடமிருந்து துணை ஆணையாளர் (கல்வி) திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

உலகளவில் பல்வேறு நாடுகளில் சுற்றுச்சூழல் அறிவியல் குறித்து தயாரிக்கப்பட்ட 67 குறும்படங்களை பார்வையிட்டு, அவற்றில் 19 குறும்படங்களை தேர்ந்தெடுத்து சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக காப்புரிமையுடன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

உலக அளவில் 23 நாடுகளில் 2017 அக்டோபர் 6 முதல் 2017 டிசம்பர் 18 வரை அறிவியல் திரைப்பட விழா நடைபெறுகிறது. சென்னையில் நடைபெறும் அறிவியல் திரைப்பட விழாவில் இக்குறும்படங்கள் ஜெர்மன் கலாச்சார நிறுவனமான கோத்தே இன்ஸ்டிடியூட்/மாக்ஸ் முயெல்லர் பவன், ரோட்டரி சங்கம் (சென்னை கிழக்கு) ஆகியவற்றின் மூலமாக காண்பிக்கப்பட்டு வருகிறது.

சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்களும் அறிந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்பதற்காக 9 முதல் 12 வயதுடைய மாணவர்களுக்கான 11 குறும்படங்களையும், 12 முதல் 16 வயதுடைய மாணவர்களுக்கான 8 குறும்படங்கள் என மொத்தம் 19 குறும்படங்களை கோத்தே இன்ஸ்டிடியூட்/மாக்ஸ் முயெல்லர் பவன் இயக்குநர் திரு.ஹெல்முட் ச்சிப்பெர்ட் மற்றும் ரோட்டரி சங்கம் (சென்னை கிழக்கு) தலைவர் திரு.புருஷோத்தம் ஆகியோரிடமிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (கல்வி) திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக்கொண்டார். இக்குறும்படங்கள் சென்னைப் பள்ளிகளின் 70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் காண்பிக்கப்பட உள்ளது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**